பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 06 2026** **06 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கடல்சார் வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள தடைகள் உலகப் பொருளாதாரத்தை மோசமாக பாதித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. காங்கிரஸ் கட்சியின் செயல்பாடு **I N D I** கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் குற்றம் சாட்டியுள்ளது.

3. போதைக் கலாச்சாரம் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் த.வெ.க. அரசு செயல்பட்டு வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. என். ஆனந்த் தெரிவித்துள்ளார்.

4. தமிழக அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கை ஏமாற்றம் தரும் வகையில் உள்ளதாக திமுகவும், மக்களை திசைதிருப்பும் வகையில் உள்ளது என்று அஇஅதிமுகவும் குற்றம் சாட்டியுள்ளன.

5. இந்தியா - ஆஃப்கனிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கடல்சார் வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள தடைகள் உலகப் பொருளாதாரத்தை மோசமாக பாதித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் ஏவியன் நகரில் **G7** அமைப்பு உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற சர்வதேச அமர்வில் நேற்று உரையாற்றிய அவர், ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் கடல்சார் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

உலக நாடுகளை இணைக்கும் கடல்வழி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள மாலுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது அனைத்து நாடுகளின் பொறுப்பு என்றும் அவர் கூறினார்.

எந்தவித அச்சமுமின்றி மாலுமிகள் தங்களது பணியை செய்யக்கூடிய பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வளைகுடா பகுதியில் நிலவும் மோதல்கள் நட்பு நாடுகளின் உயிர் மற்றும் உடமை இழப்புகளுக்கு காரணமாக அமைந்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக ஓமன் வளைகுடா பகுதியில் அமெரிக்க படைகளின் தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் பணிபுரிந்த இந்திய மாலுமிகள் **3** பேர் உயிரிழந்தது குறித்து தனது ஆழ்ந்த வருத்தத்தையும், கவலையையும் பிரதமர் திரு. மோடி வெளிப்படுத்தினார்.

மேற்காசியாவில் அமைதிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை வரவேற்பதாக கூறிய அவர், இத்தகைய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை, ராஜதந்திரம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு மூலமே நிலையான தீர்வை காண முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

**G7** அமைப்பின் மாநாட்டில் இந்தியாவின் பங்கேற்பு என்பது வெறும் அடையாளமாக மட்டுமின்றி மிகவும் முக்கியமான உத்திசார்ந்த நடவடிக்கையாக மாறியுள்ளது என்றும் அவர் கூறினார்.

மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மன்னர் திரு. ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யான், கனடா பிரதமர் திரு. **Mark Carney**, கென்ய அதிபர் திரு. **William Ruto**, ஜப்பான் பிரதமர் திருமதி **Sane Takaichi**, எகிப்து அதிபர் திரு. அப்துல் ஃபதா எல் சிசி, தென்கொரிய அதிபர் திரு. **Lee Jae Myung** ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

காங்கிரஸ் கட்சியின் செயல்பாடு I N D I கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. டி. ராஜா குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கேரளாவில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின்போது இடதுசாரி கட்சிகள், குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பிஜேபியுடன் ரகசிய உறவு வைத்துள்ளதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டியதை அவர் சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் கட்சி தன்னை சுயபரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், மதச்சார்பற்ற கட்சிகளின் ஒற்றுமைக்கு பாடுபடும் வகையில் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

போதைக் கலாச்சாரம் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் த.வெ.க. அரசு செயல்பட்டு வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. என். ஆனந்த் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று வழங்கிப் பேசிய அவர், அரசு பொறுப்பேற்ற பின்னர் கல்வி, சுகாதாரம் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக கூறினார்.

மக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் வகையில அரசு அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்றும், அரசு நலத்திட்ட உதவிகள் தாமதமின்றி பயனாளிகளிடம் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழக அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கை ஏமாற்றம் தரும் வகையில் உள்ளதாக திமுக கூறியுள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள அக்கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான திரு. தங்கம் தென்னரசு, ஏராளமான வாக்குறுதிகளை தெரிவித்து ஆட்சிக்கு வந்துள்ள த.வெ.க, அதை நிறைவேற்ற முடியாது என்று உண்மையை மறைப்பதற்காக வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளதாக கூறினார்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு பொதுமக்கள் புதிய அரசுக்கு நிர்ப்பந்தம் அளித்து வருவதால் மக்களின் கோபத்தில் இருந்து

தப்பித்துக்கொள்ள வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தமிழ்நாட்டில் தற்போது நிலவும் சட்டம்-ஒழுங்கு சீர்கேட்டை திசைதிருப்பவே வெள்ளை அறிக்கையை த.வெ.க. அரசு வெளியிட்டுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

சட்டப்பேரவை வரும் 18ஆம் தேதி கூட உள்ள நிலையில் அவசர அவசரமாக வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ஜெயகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களுக்கு அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்பதை மறைமுகமாக மக்களுக்கு உணர்த்தவே இந்த வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

திருநெல்வேலி மாவட்டம் கூடன்குளம் அணுமின் நிலையத்தின் 5வது அலகில் அணு உலை அழுத்தக் கலன் நேற்று வெற்றிகரமாக நிறுவப்பட்டது.

தற்போது இந்த அணுமின் நிலையத்தில் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு அணு உலைகள் செயல்பட்டு வருகின்றன.

மேலும் நான்கு அலகுகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் 5வது அலகிற்கான அணு உலை அழுத்தக் கலன் அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்திடம் அனுமதி பெற்ற பிறகு நேற்று நிறுவப்பட்டது.

சுமார் 320 டன் எடையுள்ள பிரம்மாண்டமான அழுத்தக் கலன், சிறப்புக் கிரேன் மூலம் உரிய பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி பொருத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் ஒருசில இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, திருச்சி, பெரம்பலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர், ராமநாதபுரம் மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றால் அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி மாஸ்கோவிற்கு வருகை தந்து நேரடியாக பேச்சு நடத்த வேண்டும் என்று ரஷ்யா கூறியுள்ளது.

------------

ரஷ்யாவின் தடையை மீறி யுக்ரைனின் அணுசக்தி துறைக்கு நிதியுதவி அளிக்க பிரிட்டன் முன்வந்துள்ளதை யுக்ரைன் வரவேற்றுள்ளது.

------------

நிஃபா வைரசை தடுக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கேரள சுகாதாரத்துறை அமைச்சர் திரு. கே. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

------------

நிபுணர்களின் உயர்மட்டக் குழு வழங்கிய பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான கால வரையறை கொண்ட செயல்திட்டத்தை தேசிய தேர்வு முகமை உடனடியாக வெளியிட வேண்டும் என்று கல்விக்கான நாடாளுமன்ற நிலைக்குழு வலியுறுத்தியுள்ளது.

------------

நாமக்கல் மாவட்டத்தில் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட 5 மாற்றுத்திறனாளிகளுக்கு சுமார் 6 லட்சம் ரூபாய் மதிப்பிலான 3 சக்கர ஸ்கூட்டர்களை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச் செல்வன் நேற்று வழங்கினார்.

------------

சமூக வலைதளங்களில் பெண்களை இழிவுபடுத்திய இருவர் கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில்

அடைக்கப்பட்டுள்ளதாக சென்னை மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

------------

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் பிரதான அருவி, புலியருவி, ஐந்தருவியில் மிதமான தண்ணீர் வந்தாலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளது.

------------

திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஆனந்த் வழங்கினார்.

------------

அரக்கோணம் - திருவாலங்காடு இடையே ரயில் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் சிறப்பு பேருந்து சேவைகளை அமைச்சர் திரு. காந்திராஜ் நேற்று தொடங்கி வைத்தார்.

------------

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றம் குறித்த முதுகலை பட்டயப்படிப்பை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் நேற்று தொடங்கி வைத்தார்.

------------

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. சமீரன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - ஆஃப்கனிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்தப் போட்டி பிற்பகல் மணி 1.30க்கு லக்னோவில் தொடங்குகிறது.

மொத்தமுள்ள 3 போட்டிகளில் முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று 1-0 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

------------

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

லீட்ஸ் நகரில் நடைபெற உள்ள இப்போட்டி இன்று இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் நார்வே 4-1 என்ற கோல் கணக்கில் ஈராக் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் பிரான்ஸ் 3-1 என்ற கோல் கணக்கில் செனகல் அணியை வென்றது.

அர்ஜென்டினா - அல்ஜீரியா இடையிலான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் ஆஸ்திரியா - ஜோர்டானை எதிர்கொள்கிறது.

இன்றிரவு 10.30 மணிக்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் போர்ச்சுகல் - காங்கோ அணியையும், நள்ளிரவு 1.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் இங்கிலாந்து - குரோஷியாவையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**